DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 128 /2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

| | | |
|---|---|---|
| Name | : | மலைச்சாமி (Pw.2) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of March 2026

( எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது சேதுபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அசா1ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

அ.த.கு.வி :–

கடந்த 19.11.2023ம் தேதியன்று மதியம் 3மணியளவில் நானும் எனது ஊரைச் சேர்ந்த ராமச்சந்திரன் என்பவரும் எனது ஊர் செல்லியாரம்மன் கோவில் அருகே இருந்தபோது கலைச்செல்வம் அவரது காட்டிலிருந்துகோவில் அருகே வந்து கொண்டிருந்தார் என்றும் அப்போது அங்கு வந்த முருகன் இரும்பு கம்பியால் இடது கை நடுவிரலில் அடித்து காயப்படுத்தினார் என்றும் மேலும்அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் விடுத்தார் என்றும்அதன்பிறகு முருகன் அண்ணான இருளாண்டி கலைச்செல்வனை அசிங்கமாக பேசி கம்பை வைத்து உடம்பில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்றும் அங்கு நாங்கள் இருவரும் விலக்கிவிட்டோம் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி –

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 128 /2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : **கலைச்செல்வன் (Pw.1)**

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of March 2026

( எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

**நான் தற்போது சேதுபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 19.01.2023ம் தேதியன்று மதியம் 3மணியளவில் கோவில் அருகே உள்ள எனது தோட்டத்திற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது செல்லையம்மன் கோவில் அருகே நான் நடந்து சென்றபோது ஏற்கனவே எதிரிகளுக்கும், எங்களுக்கும் இருந்த இடப்பிரச்சனை மனதில் வைத்துக் கொண்டு முருகன் இரும்பு கம்பியை வைத்து எனது இடது கையில் உள்ள நடுவிரலில் அடித்தார்.இருளாண்டி என்பவர் என்னை தேவிடியா பயலே உன்னை வெட்டாமல் விடமாட்டேன்**

என்று கொலை மிரட்டல் விடுத்தார். அதன்பிறகு நான் பயந்து கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு தெரிந்த நபர் என்னை இரு சக்கர வாகனத்தில் அழைத்து வந்தார். மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது திருச்சுழி போலிசார் என்னை விசாரித்தார்கள். அப்போது நடவடிக்கை எடுக்குமாறு புகார் எழுதிக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த புகார் மனு அதசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி–**

நான் கட்சியில் என்ன பதவியில் உள்ளேன் என்றால் கிளை செயலாளராக உள்ளேன். எனக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சனை உள்ளதா என்றால் எனது மாமனாருக்கும், எதிரிகளுக்கும் இடப்பிரச்சனை உள்ளது. எதிரியின் தந்தை பிஎஸ்என்எல் டவர் சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். கருப்பையா தேவர் வீட்டிற்கு அருகில் பிஎஸ்என்எல் டவர் உள்ளதா என்றால் உள்ளது. சம்பவ இடத்திற்கு அருகில் பேருந்து நிறுத்தம் உள்ளதா என்றால் உள்ளது. சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள பேருந்து நிறுத்தத்தை 8 கிராம மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. சேதுபுரம், மதுரை – அருப்புக்கோட்டை, கமுதி சாலை என்பதால் மக்கள் அதிகம் இருப்பார்கள் என்றால் எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் 11 சமுதாயத்தினர்கள் உள்ளார்கள். மலைச்சாமி, ராமச்சந்திரன் ஆகியோரில் மலைச்சாமி எனது சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்றால் சரிதான், ராமச்சந்திரன் எனது அக்கா மகன் ஆவார். உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் பேருந்து நிறுத்தத்தில் அதிக மக்கள் இருந்திருப்பார்கள் என்றாலும் அவர்களை

சாட்சியாக சேர்த்திருப்பார்கள் என்றாலும் சம்பவம் உண்மையில்லை என்பதால்தான் எனது உறவினர்களை சாட்சியாக போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறிய நபரின் பெயர் தெரியுமா என்றால் நான் மயங்கிவிட்டேன் அதனால் தெரியவில்லை. விபத்து பதிவேட்டில் நான் தனியாக மருத்துவமனைக்கு சென்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மருத்துவமனையில் மருத்துவரிடம் அடையாளம் தெரிந்த 5 நபர்கள் தாக்கியதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான், இரண்டு நபர்களின் பெயர்தான் எனக்கு தெரியும். புகார் மனுவில் அடையாளம் தெரிந்த 5 நபர்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது அக்காவுக்கும் எதிரிகளுக்கும் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது என்றும் எதிரியின் தந்தையை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தினால் நடக்காத சம்பவத்திற்கு பொய்யான புகார் மனு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. காயத்தை நானே ஏற்படுத்திக் கொண்டு எதிரி மீது பொய்யான புகார் மனு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து புகார் மனு கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.